பக்கங்கள் 17+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 18 ஞாயிற்றுக்கிழமை 03.08.2025 | அதிர்வு 003

## தென்னிலங்கையில் இன்றும் துப்பாக்கிச்சூடு

### ஒருவர் படுகாயம்



05

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## செம்மணியில் இதுவரை 130 மனித எலும்புக்கூடுகள்

### இன்றும் புதிதாக 4 அடையாளம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று இடம்பெற்ற அகழ்வின் போது புதிதாக நான்கு மனித என்புத் தொகுதிகள் 03

## திருமலையில் இரு குழுக்களிடையே மோதல்; இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை!

### அறுவர் கைது; மேலும் ஒருவரைத் தேடி வலைவீச்சு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, அலஸ்தோட்டம் பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் இன்று நடைபெற்ற விருந்தில் கலந்து கொண்டு அங்கிருந்து வெளியேறிய வேளை இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

திருகோணமலை, மடத்தடி - கிருஷ்ணர் ஒழுங்கையைச் சேர்ந்த டி.எச். வினோத் (வயது 33) என்ற இளைஞரே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 03








# பலத்த பாதுகாப்புடன் நல்லூரானை வழிபட்ட பிரதமர்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று சனிக்கிழமை விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர், பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்று வருகின்றார்.

இந்நிலையில், இன்று காலை பலத்த பாதுகாப்புடன் நல்லூர் ஆலயத்துக்கு அவர் சென்று வழிபாட்டில் ஈடுபட்டார்.

நல்லூர் ஆலய மகோற்சவ திருவிழாவின் 6ஆம் திருவிழா இன்று நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






















## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின் 29ஆம் நாள் அகழ்வுப் பணி இன்று இடம்பெற்றது.

இன்றைய அகழ்வின் போது நான்கு மனித என்புத் தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் இன்று 3 முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள் ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 130 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு சுத்தப்படுத்தப் பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும் இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித என்புத் தொகுதிகளில் இருந்து 120 மனித என்புத் தொகுதிகள் முழுமை யாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

யாழ்.நீதிவான்ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணர் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் தலை மையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினர், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட மற்றும் கலைப்பீட தொல்லியல் துறை மாணவர்கள் ஆகியோர் இன்றைய அகழ்வுப் பணிகளின் போது முன்னி லையாகி இருந்தனர்.



## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து நடைபெற்ற ஹோட்டலில் ஏற்பட்ட கருத்து மோதலே இந்தக் கொலைக் குக் காரணம் என்று பொலிஸார் கூறு கின்றனர்.

இந்தக் கொலை தொடர்பாக 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறந்த இளைஞருக்கும் தாக்குதல் நடத்தியவர்களுக்கும் இடையிலான பழைய தகராறுதான் இந்த மோதலுக்கு அடிப்படைக் காரணமாக உள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந் துள்ளது.

கத்தியால் குத்தப்பட்டு இறந்தவரின் தலையில் கல்லால் தாக்கப்பட்ட காயமும் காணப்படுகின்றது.

திருகோணமலை பொலிஸ் பிரிவு பதில் உதவி அத்தியட்சகர் சந்தன பஸ்நாயக்க தலைமையிலான தலைமை யகப் பொலிஸார், இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கொலையுடன் தொடர்புடைய மற் றொரு சந்தேகநபர் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றார்.



### துப்பாக்கி ரவைகளுடன்

# செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரர் உட்பட இருவர் நேற்று சிக்கினர்

(கி.வசந்தன்)

கொழும்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின்படி வவுனியா, நேரியகுளம் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப்புலி போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பில் இருந்து வருகை தந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளோடு வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணை பிரிவு பொலிஸாரும் இணைந்து செட்டிகுளம், துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றின் அருகாமையில் பிளாஸ்டிக் பரல் ஒன்றினுள் 86 கைக்குண்டுகள் ரி - 56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் செட்டிகுளம், நேரியகுளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 728 துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டதுடன், செட்டிகுளம் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாள்கள், போதைப்பொருள்களுடன் வீட்டிலிருந்த 19 பேர் மூதூரில் கைது!



சந்தேகத்துக்கிடமான முறையில் வீடொன்றில் தங்கியிருந்த 19 பேர் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து கூரிய வாள்கள், ஐஸ் போதைப்பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கிடமான முறையில் மூதூர் பொலிஸ் பிரிவிலுள்ள தோப்பூர் பிரதேசத்தில் ஒரு குழுவினர் ஒன்று கூடுகின்றனர் என்று மூதூர் பொலிஸாருக்கு நேற்று சனிக்கிழமை மாலை தகவல் கிடைத்ததை அடுத்து மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆலோசனைக்கமைவாக பொலிஸ் குழுவினர் அந்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது 19 பேர் கைது செய்யப்பட்டதுடன், அவர்களிடம் இருந்து 4 கூரிய வாள்கள், ஐஸ் போதைப்பொருள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஈச்சிலம்பற்று, தோப்பூர், மூதூர், பச்சநூர் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்கள் மூதூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் மேற்படி சந்தேகநபர்களை மூதூர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## தென்னிலங்கையில்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தென்னிலங்கையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மாத்தறை, கபுகம பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற அடையாளம் தெரியாத நபர்கள் இருவர், வீடொன்றின் மீது துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த 48 வயதுடைய நபர் வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தேகநபர்களை அடையாளம் காண மாத்தறை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.





# கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய திருச்சொரூப பவனி

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழாவின் இறுதி நாள் திருச்சொரூப பவனி இன்று (03) காலை இடம்பெற்றது. திருவிழாவின் இறுதிநாள் வழிபாடுகளை யாழ்.மறை மாவட்ட ஆயர் நடத்தினார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

என்னதான் சட்டங்களை உருவாக்கி, கட்டுப்பாடுகளை விதித்து, ஒழுங்குபடுத்தல்களைக் கட்டமைத்தாலும் அவற்றுக்கு ஊடாகவும் தங்கள் கைவரிசையைக் காட்டுவதில் அரசியல்வாதிகள் - ஆட்சித் தலைவர்கள் - அதிகாரத் தரப்பினர் - சமர்த்தர்கள்தான்.

முன்னர் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தலைவர்களைக் குறை கூறி, வசை பாடி, பிலாக்கணம் வைத்து, அதிகாரத்துக்கு வரும் புதிய தலைவர்களும் இவ்வாறு சட்டத்தின் ஓட்டைக்குள் புகுந்து விளையாடுவதில் பின்நிற்பவர்கள் அல்லர். அதுதான் இலங்கையின் அனுபவப் பாடமாக இருக்கின்றது.

அதிகாரப் பகிர்வை உறுதிப்படுத்தும் 13 ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ளது. ஆனால் நடைமுறையில் இல்லை. அரசமைப்பில் உள்ளதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் சட்டத்தின் மூலம் ஆட்சித் தலைமைகள் மீது விதிக்கப்படாத காரணத்தினால், 38 ஆண்டுகளாக 13 ஆவது திருத்தத்தின் பல ஷரத்துக்கள் வெறுமனே அரசமைப்பின் வெள்ளைத்தாளில் கருப்பு மை எழுத்தில் தூங்கிக் கிடக்கின்றன. நடைமுறையாக்கத்தில் இல்லை.

மாகாண சபைத் தேர்தல்களை ஒழுங்காக நடத்த வேண்டும் என்று அரசமைப்பு வலியுறுத்தினாலும் தேர்தல்களை நடத்துவதற்கான சட்டத்தை காலாவதி ஆக்கிவிட்டு, 7, 8 வருடங்களாக அந்தத் தேர்தலில் நடக்காமல் பார்த்துக் கொள்ளுகின்றனர் ஆட்சித் தலைவர்கள். தங்களுடைய நேரடிப் பிரதிநிதிகளான ஆளுநர்கள் மூலம் மாகாணங்களை தாங்களே அதிகாரம் செய்து, நிர்வகித்து வருகின்றனர்.

உள்ளூராட்சி தேர்தல்களை ஒழுங்காக நடத்த வேண்டும் என்று சட்டங்களும், அவற்றை நடைமுறைப்படுத்தத் தேர்தல் ஆணையமும் இருந்த போதிலும், தேர்தலுக்கான நிதியை நிதியமைச்சர் என்ற முறையில் ஒதுக்கீடு செய்யாமல் தடை விதித்து, தேர்தலையே இரண்டரை வருடங்கள் நடத்தாமல் இழுத்தடித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அந்தத் தலைவர்களை எல்லாம் மோசமாக விமர்சித்து, அதன் மீது ஒரு பிரசாரத்தை கட்டமைத்து, ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிக் கொண்ட தேசிய மக்கள் சக்தியினரும், அதன் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் கூட இந்தப் போக்குக்கு விதிவிலக்கு அல்லர்.

நாட்டில் ஜனநாயக விழுமியங்களை மேம்படுத்தும் விதத்தில் திருப்புமுனைச் சட்டமாக வந்தது தகவல் அறியும் உரிமைச் சட்டமாகும். அதனை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் அதிகாரம் தகவல் உரிமை ஆணையத்துக்குரியது. அந்தச் சட்ட அதிகாரத்தை ஆணையம் பயன்படுத்துவதற்கு அது அதன் தலைமையின் கீழ் முழுமையாக இயங்க வேண்டும்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு மேல் அந்த ஆணையத்தின் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கின்றது. இதுவரை அப்பதவியில் இருந்த முன்னாள் நீதியரசர் நமது சொந்தக் காரணங்களுக்காக ராஜினாமாச் செய்து பதவி விலகி விட்டார். அந்த இடத்துக்கு ஒருவரை நியமிக்க வேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு. உரிய பெயரை பரிந்துரை செய்து, அரசமைப்புக் கவுன்ஸிலின் அங்கீகாரத்தைப் பெற்று, அந்த நியமனத்தை அவர் செய்ய வேண்டும். அந்த நியமனத்தை செய்யாமல் இருந்தால் தகவல் அறியும் உரிமைக்கான ஆணையம் முழுமையாகச் செயற்பட முடியாது. அந்த ஆணையத்துக்கு வரும் வெற்றிடத்தை இன்ன காலகட்டத்துக்குள் நியமனம் செய்ய வேண்டும் என்ற சட்டக் கடப்பாடு - வலியுறுத்தல் - நிர்ப்பந்தம் - ஜனாதிபதிக்கு இல்லை. அந்த சட்ட ஓட்டையைப் பயன்படுத்தி, அந்தப் பதவிக்கு ஒருவரை நியமிக்காமல், இழுத்தடித்து, அந்த ஆணையத்தின் செயற்பாட்டையே முடக்கி வைத்திருக்கிறார் ஜனாதிபதி. அதன் மூலம் தனது ஆட்சி அதிகாரத்தை கேள்விக்கு உள்ளாக்கும் விதத்தில் மக்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்காமல் அவர் பார்த்துக் கொள்கிறார்.

என்னதான் அரசியல் துஷ்பிரயோகம், தவறான ஆட்சி முறை, பிழையான முன்னுதாரணங்கள் என்று முன்னைய ஆட்சியாளர்களை இப்போதைய அதிகார வர்க்கம் திட்டித் தீர்த்தாலும், இதுவும் அதே குட்டையில் ஊறிய மட்டைதான் என்பதை தனது நடவடிக்கைகள் மூலம் தொடர்ந்து உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

# ஹஜ் சட்ட அறிக்கையும் மசோதாவும் புத்தசாஸன அமைச்சரிடம் கையளிப்பு



(றிபாஸ்)

ஹஜ் சட்டத்தை உருவாக்கும் பொறுப்புகளுக்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் நீதியரசர் ஏ. டபிள்யூ. ஏ. சலாம், தயாரிக்கப்பட்ட அறிக்கையும் மசோதா சட்டத்தையும் புத்தசாஸன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிடும சுனில் செனெவியிடம் கடந்த செவ்வாயன்று செத்சிரிபாயவில் வைத்து ஒப்படைத்தார்




# நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் இரண்டு உள்ளூராட்சி சபைகளது வீதி !

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

இரு உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ளதால் தென்மராட்சி தெற்குப் பிரதேச மக்கள் நீண்டதூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி நுணாவில் மேற்கிலிருந்து தென்மராட்சி தெற்கு மறவன் புலவு கிராமத்துக்குச் செல்லும் தேவாலய வீதி, ஏ - 9 வீதியில் இருந்து தண்டவாளம் வரையான வீதி சாவகச்சேரி நகரசபையின் பராமரிப்பிலும் தண்டவாளத்திலிருந்து மறவன்புலவு சந்தி வரையும் சாவகச்சேரி பிரதேச சபையின் பராமரிப்பிலும் உள்ளன.

சாவகச்சேரி நகரசபையினர் ஏ - 9 வீதியிலிருந்து கொல்லங்கிராய் மயானம்வரை புனரமைக்கும் அதே வேளையில் மயானச் சந்தியில் இருந்து தண்டவாளம் வரையான வீதி பராமரிப்பதில்லை. சாவகச்சேரி பிரதேச சபையினர் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்கு இந்த வீதியின் இருமருங்கிலும் நெல்வயல்கள் காணப்படுகிறது.

இந்த வயல்களில் காலபோக நெற்செய்கை விதைப்பு தொடக்கம் அறுவடை வரை பெருமளவு வாகனங்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி வருகின்றன. சாவகச்சேரிக்குச் செல்வதற்கு இந்த வீதி குறுகிய பாதை என்பதால் சாவகச்சேரி செல்லும் மாணவர்கள் மற்றும் விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் பொதுமக்கள் தமது வாகனங்களை இந்த வீதியூடாகப் பயணித்து வந்தனர்.

இந்த வீதி நீண்ட காலமாக பராமரிப்பின்றி மணலாக காணப்படுவதால் சாவகச்சேரி செல்வோர் தனங்களப்பு ஊடாகப் பயணிக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்தனர்.

அத்துடன் வீதியின் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்து வீதியை மறைத்து நிற்கின்றன எனவும் இந்த பற்றைக்குள் பெருமளவு விஷஜந்துகள் காணப்படுகின்றன எனவும் தெரிவித்தனர்.

வீதியின் புனரமைப்பு தொடர்பாக கடந்த 2011 ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்த காலம் தொடக்கம் தொடர்ச்சியாக உள்ளூராட்சி சபைகளுக்கு அங்குள்ள பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்து வருகின்றனர் எனவும் இதுவரை வீதியைப் புனரமைத்து வழங்க இரு சபைகளும் முன்வருவதில்லை எனவும் தெரிவித்தனர்.



# தமிழரசுக் கட்சி எம்.பி. சிவஞானம் ஸ்ரீதரன் மயிலிட்டித் துறைக்குக் கண்காணிப்பு விஜயம்

(எஸ். நிதர்ஷன்)

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் நேற்று மயிலிட்டி துறைமுகத்துக்குக் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

மயிலிட்டி துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள இடப்பற்றாக்குறை, இந்திய மீனவர்களின் 140 இற்கும் மேற்பட்ட படகுகள் குறித்த துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள இட நெருக்கடி எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை தொடர்பில் இதன் போது அவர் ஆராய்ந்தார்.

குறிப்பாக உள்ளூர் மீனவர்கள் தங்களுடைய படகுகளை கரையில் கட்டி வைக்க முடியாத அளவுக்கு இடப்பற்றாக்குறை காணப்படுகிறது என்று மீனவர்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்கு சுட்டிக்காட்டினர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் கருத்து தெரிவிக்கையில்,

மயிலிட்டி துறைமுகம் என்பது இலங்கையின் துறைமுகங்களில் மிகப் பெரிய துறைமுகம். யுத்தத்துக்கு முன்னர் இந்தத் துறைமுகத்தில் இருந்து பிடிக்கப்படும் மீன்கள் தேசிய பொருளாதார மீன் உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு வகிக்கின்றது.

ஆனால் அந்த நிலைமை தற்பொழுது மாறி மீனவர்கள், பாதிப்படையும் செயலே காணப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தத் துறைமுகம் தேசிய பொருளாதார உற்பத்தியில் அளப்பெரிய பங்காற்றியது.

ஆனால், தற்பொழுது இந்தத் துறைமுகம் இந்திய மீனவர்களின் படகுகளைக் கட்டி வைப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஒரு இடமாகவே காணப்படுகின்றது.

இதற்கு ஒரு மாற்றுத் தீர்வை நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இது தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்து பேச உள்ளேன்.- என்றார்.

# எமது தொழில் முயற்சியாளர் உற்பத்திகள் தரமாகவுள்ளன!

## ஏற்றுமதியாளர் வருகைக்கு இதுவே காரணம் என்கிறார் அரச அதிபர்

எமது தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகள் தரமாகவுள்ளதால் அவர்களை நோக்கி ஏற்றுமதியாளர்கள் வருகை தருகின்றனர் என்று யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில் துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நேற்று முன்தினம் (01) யாழ். அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அரச அதிபர்,

நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தொழில் துறை சார்ந்த உத்தியோகத்தர்களுக்கான இந்த விழிப்புணர்வு செயலமர்வில் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சமன் சிறிலால் மற்றும் அவரது குழுவினருக்கு தமது வரவேற்பையும் நன்றிகளையும் தெரிவித்தார்.

இந்தக் கைத்தொழில்சார் நடவடிக்கைகளில் ஏறத்தாழ 6000 தொழில் முயற்சியாளர்கள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் சுமார் 600 தொழில் முயற்சியாளர்களே வினைத்திறனாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்களில் பலர் நுண் மற்றும் சிறிய தொழில் முயற்சிகளில் இருந்து நடுத்தர தொழில் முயற்சி நோக்கிச் செயற்பட்டு வருகின்றனர்.

இத்தகைய தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி என்பது பாரிய பிரச்சினையாக உள்ளது. இந்தக் காலகட்டத்தில் அரச நிர்வாக கட்டமைப்பால் பல வழிகளில் உதவிகள் வழங்கப்படுகின்ற போதிலும் சில முயற்சியாளர்கள் அரசால் இலவசமாக வாழ்வாதார உதவிகள் வழங்கப்படுவதால் அந்த உதவிகளைச் சரியான முறையில் பயன்படுத்துவது குறைவாகக் காணப்படுகிறது.

இதே சொந்த முதலீட்டில் ஒரு வியாபாரத்தை மேற்கொள்ளும் போது முனைப்புடன் முயற்சியுடன் செயல்படுகின்றனர்.

எமது பல்வேறு முயற்சியாளர்களை நோக்கி ஏற்றுமதியாளர்கள் யாழ். நோக்கி வருகின்றனர். அதற்கு அவர்களின் தரமான பொருள்களே காரணம். இருப்பினும் முயற்சியாளர்களுக்கு அதன் அளவு, இலாபம் மற்றும் சந்தைப் பெறுமதி என்பவற்றில் இலாபம் குறைவாக காணப்படுகிறது. அதற்கு அரச நிர்வாக கட்டமைப்பின் இவ்வாறான விழிப்புணர்வு பயிற்சிகள் வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்த துணை புரியும்.– என்றார்.

தொழில் முயற்சியாளர்களுக்கான தொழில் விருத்தி விழிப்புணர்வு செயலமர்வானது 50 தொழில் முயற்சியாளர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சமன் சிறிலால், பிரதம நிர்வாக அதிகாரி யூட் பெர்னான்டோ மற்றும் உதவிப்பணிப்பாளர் சசிகதி மெல், மாவட்ட உதவி, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், வங்கிகளின் பிரதிநிதிகள், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர், துறைசார் உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




# அனுமதியின்றி குழாய்க் கிணறு அமைத்தால் சட்ட நடவடிக்கை!

## வேலணை பிரதேச சபை அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் முறையான அனுமதி பெறாது குழாய்க் கிணறுகள் அமைப்பது முற்றக தடைசெய்யப்பட்டுள்ளது. நடைமுறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இயந்திரங்கள் தொடர்பிலும் கடுமையா நடவடிக்கை எடுக்கப்படும் என்று வேலணை பிரதேச சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமாரின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வேலணைப் பிரதேச சபைக்கு உட்பட்ட இடங்களில் அண்மைக் காலமாக எந்தவிதமான அனுமதியும் பெறப்படாது அதிக எண்ணிக்கையான குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் அமைக்கப்படும் குழாய்க் கிணறுகளை எந்தவிதமான கட்டுப்பாடுகள் மற்றும் போதிய வழிகாட்டுதல்களுமின்றித் தான்தோன்றித்தனமாக அமைப்பதானது எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற மிக சொற்பமான நன்னீர்க் கிணறுகளையும் வெகு விரைவில் பாதிப்படையச் செய்யும் ஒரு செயற்பாடாகவே இருக்கின்றது.

இதனால் குறித்த செயற்பாட்டை விரைந்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

அதன் அடிப்படையில் குழாய்க் கிணறுகளை அமைக்க உத்தேசித்துள்ளவர்கள் பிரதேச சபையின் ஊடாகத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு விண்ணப்பித்து அவர்களது சிபாரிசுக்கு அமைவாகப் பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது கட்டாயமானதாகும்.

அத்துடன் உடனடியாகச் செயற்படும் வண்ணம் இந்த நடைமுறை இறுக்கமாக பின்பற்றப்படும் என்பதோடு அனுமதியின்றிக் குழாய்க்கிணறு அமைப்பவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேநேரம் குழாய்க்கிணறு அமைக்கும் சேவை வழங்குநர்கள் தங்களது சேவை வழங்கல் தொடர்பாக பிரதேச சபையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு உரிமப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குழாய்க் கிணறு அமைக்கும் சேவை வழங்குநர்கள் குழாய்க் கிணறு அமைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டவர்களுக்கு மாத்திரமே கிணறு அமைத்துக்கொடுக்க வேண்டும்.

அனுமதிப்பத்திரம் இல்லாதோருக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்தல் தண்டனைக்கு உரிய குற்றச்செயலாகும். அத்துடன் குழாய்க் கிணறு அமைப்பதற்கான சேவை வழங்கல் உரிமப்பத்திரமின்றி எமது பிரதேச சபைக்குள் பிரவேசிக்கும் குழாய்க் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் பிரதேச சபையால் பொலிஸார் ஊடாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அருகிவரும் தீவகப் பிரதேசத்தின் நன்னீர் வளத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கு வேலணைப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நடைமுறைகளைப் பின்பற்றி எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேலணை பிரதேச சபை கோரியுள்ளது.- என்றுள்ளது.

# 'இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு ஒற்றுமையின் தூய்மையான பயணம்'

## 14,15 ஆம் திகதிகளில் நடமாடும் சேவை



ஜனாதிபதியின் எண்ணக்கருவான 'கிளீன் ஸ்ரீலங்கா' செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக "இதயபூர்வமாக யாழ்ப்பாணத்துக்கு ஒற்றுமையின் தூய்மையான பயணம்" எனும் கருப்பொருளிலான நடமாடும் சேவை எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில், பருத்தித்துறை, கரவெட்டி மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும், 15 ஆம் திகதி உடுவில், தெல்லிப்பளை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் உடுவில் பிரதேச செயலகத்திலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் ஆள்பதிவுச் சேவை, பிறப்பு இறப்புச் சான்றிதழ் வழங்கும் சேவைகள், ஓய்வூதியச் சேவைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சேவைகள், மோட்டார் வாகனப் பதிவுகள், கம்பனிப் பதிவுகள், சுகாதார சேவைகள், கண் பரிசோதனை மற்றும் மருத்துவ சேவைகள், ஏற்றுமதிக்கான வாய்ப்புக்கள், வடக்கு மாகாணத்தின் சகல அமைச்சுக்குரிய சேவைகள், பிரதேச செயலகம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரிய சேவைகள் உள்ளிட்ட சேவைகள் நடைபெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவைக்கான முன்னாயத்த ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக, நேற்று (02) யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்துக்கும் உடுவில் பிரதேச செயலகத்துக்கும் விஜயம் செய்தார்.

மேலதிக அரச அதிபர் . க. சிவகரன், மேலதிக அரச அதிபர் (காணி)பா. ஜெயகரன், உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்த முன்னாயத்த ஏற்பாடுகளில் பருத்தித்துறையில் பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தரும், உடுவிலில் உதவிப் பிரதேச செயலாளரும் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.



# மாவடிப்பள்ளி ஆற்றில் குடும்பஸ்தரின் சடலம்!

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி ஆற்றில் குடும்பஸ்தரின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

காயங்களுடன் மீட்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட குடும்பஸ்தரின் சடலம் தொடர்பில் காரைதீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி ஆற்றில் 53 வயது மதிக்கத்தக்க மட்டக்களப்பு மாவட்டம் செங்கலடி பகுதியை சேர்ந்த பாக்கியராசா கிருபாகரன் என்ற குடும்பஸ்தரே இவ்வாறு இன்று (3) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்தின் கழுத்து மற்றும் தலை, தோல்பட்டை உள்ளிட்ட பகுதிகளில் காயங்கள் காணப்படுகின்றன என்று ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மாவடிப்பள்ளி பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் தொழிலாளியாக இருந்துள்ளார்.நேற்று முதல் வேலைக்கு வரவில்லை என்று அரிசி ஆலை உரிமையாளர் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளார்.

சம்பவ இடத்துக்குக் கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே.இப்னு அஸார் சென்று மேற்பார்வை செய்து விசாரணைகளைத் துரிதப்படுத்தமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

விசாரணைகளை காரைதீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




# பொத்துவில் மோட்டார் போக்குவரத்து பொறுப்பதிகாரிக்குக் கௌரவிப்பு

(றிபாஸ்)

பொத்துவில் பொலிஸ் நிலைய மோட்டார் போக்குவரத்து பொறுப்பதிகாரி ஜே. ஏ. பீ.குமாரசிங்கவின் கடமைப் பொறுப்பைக் கௌரவித்து பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உதவித் தவிசாளரும், அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி இணைப்பாளருமான ஏ.எம்.எம்.தாஜுதீன் பெயர்ப் பலகையை வழங்கிக் கௌரவித்தார்.




# மன்னார் மணல் அகழ்வுக்கு எதிராக இளையோர் விழிப்புணர்வு போராட்டம்

## 6,7 இல் முன்னெடுக்க ஏற்பாடு

(எஸ். நிதர்ஷன்)

பல்தேசிய கம்பனிகளின் கனியவளச் சுரண்டலால் பாதிக்கப்படும் மன்னார் மாவட்டத்தின் மக்கள் இருப்பையும் பூர்வீக நிலத்ததையும் பாதுகாக்க மன்னார் மாவட்ட இளையோர் ஒன்றிணைந்து எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் அடையாள விழிப்புணர்வு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க ஏற்பாடு செய்துள்ளனர் என்று அறிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த குறித்த ஏற்பாடு குழுவினர் இது குறித்து மேலும் கூறுகையில்,

மன்னார் மாவட்டத்தின் இயற்கை வழங்களில் ஒன்றாக மணல் இருக்கின்றது. இந்த மணல் விசேடமக இல்மனைற் கனிமத்தை கொண்டதாக இருபதால் அதற்கு உலகளவில் பரந்துபட்ட கேள்வி இருந்து வருகின்றது.

இந்த நிலையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆஸ்திரேலிய பல்தேசி நிறுவனம் ஒன்று குறித்த இல்மனைட் மணலை அகழ்ந்து எடுக்க முயற்சித்து வருகின்றது. அனாலும் அதற்காக அனுமதிகள் இழுபறியில் இருந்து வந்த நிலையில் இந்த அரசால் அது வழங்கப்படுவ தற்கான சுழல் உருவாகியுள்ளது.

குறிப்பாக ஆஸ்திரேலிய நிறுவனம் அகழ்வுக்கான சூழலியல் ஆய்வு அறிக்கைக்காக சுற்றுச்சூழல் அதிகாரசபையிடம் விண்ணபித்திருந்த நிலையில் அந்த நிறுவனம் ஆய்வு செய்து சாதகமான அறிக்கை வழங்கியுள்ளது.

இதையடுத்து நிறுவனமயமான பல்தேசிய நிறுவனங்களுக்கு மணலை அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படும் ஏது நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு பல்தேசிய நிறுவனங்கள் மன்னாரின் இல்மனைட் மணலை அகழ்ந்தெடுத்தால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் மன்னாரின் மக்கள் வாழ் நிலங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்து மக்களில் இருப்பையும் கருவறுத்துச் சென்றுவிடும் நிலை உருவாகும்.

இந்த அழிவை தடுப்பதற்கும் எமது பூர்வீக நிலத்தையும் மக்கள் இருப்பையும் பாதுகாக்கவே ‘கரு, நில பாதுகாப்பு’ என்றா கருப் பொருளுடன் மக்களை விழிபுணர்வு அடையச் செய்யப் போராட்டம் ஒன்றை மேற்கொள்ள இளையோராகிய நாம் வீதிக்கு இறங்கவுள்ளோம்.

எமது இந்தப் போராட்டத்துக்கு மன்னார் மாவட்ட மக்கள் குறிப்பாக இளைஞர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம்.

எமது இந்த போராட்டத்தில் விழிப்புணர்வு நாடகங்கள், கையெழுத்து போராட்டம் என்பன முதன்மை பெறவுள்ளன. போராட்டத்தின் இறுதியில் மன்னார் மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.- என்றனர்.





# நுவரெலியா மாவட்டத்தில் கனத்த மழை சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை

(மஸ்கெலியா )

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கனத்த மழை பெய்தது வருகிறது. இதனால் உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் உல்லாசப் பயணிகள் தற்போதைய காலநிலையில் மலைக்கு செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பிரதான படிக்கட்டுகளில் அதிகளவில் மலை உச்சியில் இருந்து மழை நீர் வெள்ளம் போல் வடிந்து வருவதால் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகையால் சிவனொளிபாத மலைக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் மேலும் சியத்தகங்குல ஓயா வெள்ள பெருக்கு ஏற்பட்டு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# மட்டக்களப்பு மகிழடித்தீவில் ஓட்டோ விபத்தில் மூவர் காயம்!

(பழுவூரான்)

கொக்கட்டிச்சோலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மகிழடித்தீவு பிரதான வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயம் அடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ஓட்டோ அதிக வேகம் காரண மாக கட்டுப்பாட்டை இழந்து மின்சாரக் கம்பத்தில் மோதுண்டு விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கொக்கட் டிச்சோலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் சிக்கிய ஓட்டோவுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

விபத்துச் சம்பவத்தில் படுகாயம் அடைந்தவர்கள் மகிழடி தீவு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொக்கட்டிச் சோலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கல்லடியில் ஆணின் சடலம் மீட்பு!

(பழுவூரான்)

கல்லடி கல்முனை பிரதான வீதியில் அமைந்துள்ள கல்லடி கிறிஸ்தவ தேவாலயத்துக்கு அருகாமையில் இருந்து 63 வயதுடைய ஆண் ஒருவ ரின் சடலம் இன்று ஞாயிற்றுக்கிழமை (03) காலை மீட்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

சடலமானது கிரான்குளம் பகுதியைச் சேர்ந்த ஐய்யாதுரை பத்மநாதன் என்பவரது என்று அடையாளம் காணப் பட்டுள்ளது.

குறித்த நபர் வீட்டிலிருந்து ஆரை யம்பதி வைத்தியசாலைக்குச் செல்வ தாகக் கூறி விட்டு வீட்டிலிருந்து வெளி யேறினார் என்றும் மூன்று நாள்களாகத் தேடப்பட்டு வந்த நிலையில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத் தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமையும் அ.தி.மு.க. ஆட்சியில் குற்றங்கள் தடுத்து நிறுத்தப்படும்

## பழனிசாமி உறுதி



“தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது. அடுத்து அமையும் அதிமுக ஆட்சியில் இரும்புக் கரம் கொண்டு குற்றங்கள் தடுக்கப்படும்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான பழனிசாமி தெரிவிப்பு

தூத்துக்குடியில் தொழில்முனைவோர், விவசாயிகள், உப்புஉற்பத்தியாளர்கள், மீனவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது பழனிசாமி உரையாற்றுகையில்,

“அ.தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடி விமான நிலையம் அமைக்க 750 ஏக்கர் நிலம் கையகப்படுத்த நிதி ஒதுக்கப்பட்டு, பணிகள் தொடங்கின. இத்திட்டத்துக்கு நிலம் எடுப்பதற்கு முழு காரணம் அ.தி.மு.க. அரசுதான். மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும், தூத்துக்குடியில் வர்த்தக மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதே போல, வி.வி.டி. சந்திப்பு பகுதியில் பாலம் அமைக்கவும், உப்பளத் தொழிலாளர்களுக்கு நலவாரியம் அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிமராமத்து திட்டம் மூலம் குளங்கள் தூர்வாரப்படும். தொழில்கள் தொடங்குவதற்கான அனுமதி பெற ஒற்றைச்சாளர முறையை மீண்டும் கொண்டுவருவோம். அ.தி.மு.க. ஆட்சியில்தான் சாலைகள் தரமாக விரிவாக்கம் செய்யப்பட்டன. இந்தியாவிலேயே அதிக நீளத்தில் தார் சாலைகள் கொண்ட மாநிலம் தமிழகம் என்ற சூழலை உருவாக்கினோம்.

2022 பொலிஸ் மானியக் கோரிக்கையின்போது பாடசாலை , கல்லூரி அருகே கஞ்சா விற்பனை செய்ததாக 2,348 பேர் கண்டறியப்பட்டு, 140 பேர் கைது செய்யப்பட்டதாக தெரிவித்தனர். எங்கு பார்த்தாலும் போதைப் பொருள்கள் விற்பனை நடக்கிறது. கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் சீண்டல் நடப்பதற்கு போதைப் பொருள் பழக்கமே முக்கியக் காரணம்.

பொலிஸாருக்கு முழு சுதந்திரம் கொடுத்தால்தான் போதைப் பொருள்கள் பழக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும். 2021 இற்கு முன்பு பொலிஸ் எப்படி செயல்பட்டு, தற்போது எப்படி செயல்படுகிறது? மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமையும் போது, இரும்புக்கரம் கொண்டு குற்றங்கள் தடுக்கப்படும்.” என்றார்.

# சுதந்திர தினத்தையொட்டி மூவர்ண கொடி யாத்திரை

## பா.ஜ.கவில் ஒருங்கிணைப்புக் குழு நியமனம்




சுதந்திர தினத்தையொட்டி மூவர்ணக் கொடி யாத்திரை மற்றும் இதர பணிகளை ஒருங்கிணைக்க தமிழக பா.ஜ.கவில் மாநில அளவிலான குழுவை நயினார் நாகேந்திரன் நியமித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள அறிவிப்பில்,

“இந்தாண்டு சுதந்திர தினத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த பா.ஜ.க. தேசிய தலைவர் ஜெ.பி.நட்டா அறிவுறுத்தியுள்ளார். அதன்படி, திரங்கா (மூவர்ண கொடி யாத்திரை, வீடுதோறும் தேசியக் கொடி ஏற்றுதல் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளுதல் என பல்வேறு நிகழ்ச்சிகள் எதிர்வரும் 10 திகதி முதல் நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மூவர்ணக் கொடி யாத்திரை உள்ளிட்ட பணிகளை ஒருங்கிணைக்கவும், வழி நடத்தவும் மாநில பொதுச் செயலாளர் ஏ.பி.முருகானந்தம் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# படிக்கும்போதே விவசாயம் குறித்த சிந்தனையை ஏற்படுத்த வேண்டும்; அண்ணாமலை வலியுறுத்தல்

படிக்கும் காலத்திலேயே மாணவர்களுக்கு விவசாயம் குறித்த சிந்தனையை ஏற்படுத்த வேண்டும் என்று ஐ.ஐ.டி. மாநாட்டில் தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணா மலை வலியுறுத்தினார்.

சென்னை ஐ.ஐ.டி. மற்றும் 'வி தி லீடர்ஸ் பவுண்டேஷன்' என்ற அமைப்பின் சார்பில் இளையோர் வேளாண் மாநாடு நேற்று நடை பெற்றது. இதில் தமிழக பாஜக முன்னாள் தலைவரும், 'வி தி லீடர்ஸ் பவுண்டேஷன்' அமைப்பின் தலைமை ஊக்குவிப்பாளருமான அண்ணாமலை, இத்திட்டத்தை தொடங்கிவைத்து உரையாற்றுகையில்,

"இந்திய பொருளாதார வளர்ச்சியில் வேளாண்மையின் பங்கு மிகக் குறைவாக இருக்கிறது. அதை மாற்றக்கூடிய முயற்சியாகத்தான் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இயற்கை வேளாண் பொருட்களைத் தேடி வாங்கும் அளவுக்கு மக்க ளிடையே மிகப்பெரிய அளவில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

விவசாயத்தில் அதிக ரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால் புற்று நோய் உள்ளிட்ட நோய்களின் பாதிப்பு அதிகரித்து வருவதை பார்க்கிறோம். இதனால், நிறைய விவசாயிகள் இயற்கை விவசாயத்துக்கு மாறி வருகின்றனர். விவசாயம் என்பது முற்றிலும் ஒரு புதிய துறை. தகவல் தொழில்நுட்பத்துறை வேலையை உதறிவிட்டு இயற்கை விவசாயத்துக்கு மாறி யுள்ள பலரை, குறிப்பாகப் பெண் களையும் நாம் பார்க்கிறோம்.



விவசாயம் செய்ய வேண்டும் என்ற பலர் விரும்பினாலும் போதிய அளவு நிலம் இருக்காது. இப்படிப்பட்ட சூழலில் தற்போது தொடங்கிவைக்கப்பட்டுள்ள இளையோர் வேளாண் ஊக்குவிப்பு திட்டம் விவசாயத்தில் ஆர்வமுள்ள இளைஞர்களுக்கு நல்லதொரு தளத்தை ஏற்படுத்தி தரும். இங்கு வரும் இளைஞர்களுக்கு இயற்கை விவசாயம் குறித்து கற்றுத்தருவார்கள். மாணவர்கள் படிக்கும் காலத்தி லேயே அவர்கள் மனதில் வேளாண் குறித்த சிந்தனையை ஏற்படுத்த வேண்டும். இதுதான் புதிய திட்டத்தின் தலையாய நோக்கம் ஆகும்." என்றார்.

# காசாவில் பஞ்சம், ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு







இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருப்பதால் முற்றுகையிடப்பட்ட காசா பகுதியில் உள்ள பாலஸ்தீனியர்கள் சாப்பிட ஏதும் கிடைக்காமல் தவித்துவருகின்றனர்.

காசாவில் பஞ்சம் மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக மேலும் இரண்டு குழந்தைகள் மற்றும் ஒரு முதியவர் உயிரிழந்துள்ளதாக அந்தப் பகுதியின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால் அந்தப் பகுதியில் பட்டினியால் இறந்தவர்களின் எண்ணிக்கை 92 குழந்தைகள் உள்ளடங்கலாக 162 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசா நகரின் தென்மேற்கே உதவி வாகனத்துக்காக காத்திருந்த பொதுமக்களை இஸ்ரேலியப் படைகள் குறிவைத்ததில் 12 பேர் கொல்லப்பட்டதுடன் 90 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, காசா மீதான இஸ்ரேலின் போரில் குறைந்தது 60,332 பேர் கொல்லப்பட்டதுடன் 147,643 பேர் காயமடைந்தனர்.



# பாலஸ்தீன அரசு நிறுவப்படும் வரை ஆயுதங்களை கைவிடப்போவதில்லை

## ஹமாஸ் அமைப்பு அறிவிப்பு

சுதந்திர பாலஸ்தீன அரசு நிறுவப்படும் வரை ஆயுதங்களை கைவிடப்போவதில்லை என்று ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

காசாவில்போரைமுடிவுக்குக்கொண்டு வருவதற்கானமுக்கியஇஸ்ரேலியகோரிக்கைக்கு, இந்த பதிலை ஹமாஸ் வெளியிட்டுள்ளது.

முன்னதாக, காசா போரில் 60 நாள் போர் நிறுத்தத்தை உறுதி செய்வதையும், பணயக்கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தையும் நோக்கமாகக் கொண்ட ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையேயான மறைமுக பேச்சுவார்த்தைகள் கடந்த வாரம் முடிவின்றி இடைநிறுத்தப்பட்டன.

இந்தநிலையில், இஸ்ரேலால் இராணுவ ரீதியாக பாதிக்கப்பட்ட ஹமாஸ் அமைப்பு, ஜெருசலேமை தலைநகராகக் கொண்ட சுதந்திரமான, முழு இறையாண்மைகொண்டபாலஸ்தீனஅரசுநிறுவப்படும் வரை ஆயுத எதிர்ப்பை கைவிட முடியாது என்று தெரிவித்துள்ளது.

மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் ஹமாஸை நிராயுதபாணியாக்குவதை இஸ்ரேல் ஒரு முக்கிய நிபந்தனையாக கூறி வரும் நிலையில், ஹமாஸ் தமது அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

# பாகிஸ்தானின் நிலநடுக்கம்



பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வா, பஞ்சாப் மற்றும் இஸ்லாமாபாத் உள்ளிட்ட பகுதிகளில் இன்று அதிகாலையில் நிலநடுக்கம் ஏற்பட்டதால், மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

நிலநடுக்கம் 5.4 ரிக்டர் அளவில் இருந்ததாக பதிவாகி உள்ளது.

தேசிய நில அதிர்வு கண்காணிப்பு மையம் தகவல்களின்படி, இந்த நிலநடுக்கம் இன்று அதிகாலை 2:04 மணிக்கு 102 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது.

கைபர் பக்துன்க்வாவின் பெஷாவர், ஸ்வாட், மலாகண்ட், நவ்ஷேரா, சர்சத்தா, கரக், திர், மர்தான், முகமது, ஷாங்க்லா, ஹங்கு, ஸ்வாபி, ஹறிபூர் மற்றும் அபோட்டாபாத் உள்ளிட்ட பல மாவட்டங்களிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, லாகூர், அட்டோக், டாக்ஸிலா, முர்ரி, சியால்கோட், குஜ்ரான்வாலா, குஜராத், ஷேக்குபுரா, ஃபெரோஸ்வாலா, முரிட்கே மற்றும் பஞ்சாபின் பிற பகுதிகளிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டது.

அதிகாலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் மக்களிடம் பீதியை ஏற்படுத்தியது. இதனால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். இருப்பினும், இந்த நிலநடுக்கத்தால் உயிர் அல்லது சொத்து இழப்பு எதுவும் ஏற்படவில்லை என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்கங்கள் 02

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 03/08/2025

## கனடாவில் படகு விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழப்பு



கனடாவின் கவார்த்தா

02



# கனடாவில் நிலநடுக்கம் ஏற்படும் சாத்தியங்கள்

## விஞ்ஞானிகள் எச்சரிக்கை

கனடாவில், பூமிக்கடியில் அமைதியாக மாறி வரும் ஒரு பெரும் பிளவு கோடு தொடர்பாக விஞ்ஞானிகள் கவலையைத் தெரிவித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

'டின்டினா பிளவு' என அழைக்கப்படும் இந்த நிலப் பிளவு, யூகோனிலிருந்து அலாஸ்கா வரை நீளமாகச் செல்லும் ஒரு முக்கிய நிலச்சரிவுப் பகுதி.

சமீபத்திய ஆய்வுகளின்படி, இந்த பிளவு மில்லியன் கணக்கான ஆண்டுகளாக அழுத்தத்தை குவித்து வருகிறது.

02

# டொரோன்டோவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

டொரோன்டோவில் உள்ள நெடுஞ்சாலையில் குப்பை ஏற்றிச்சென்ற டிரக், மோட்டார் சைக்கிளை மோதியதில் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் குறித்து ஒன்டாரியோ மாகாண பொலிஸ் விசாரணை நடத்தி வருகிறது.

ஆலன் சாலைக்கு அருகிலுள்ள மேற்கு நோக்கிய விரைவு பாதைகளில் இந்த விபத்து நிகழ்ந்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

குப்பை ஏற்றிச் சென்ற டிரக் கட்டுப்பாட்டை இழந்து மோட்டார் சைக்கிளுடன் மோதியதாக விசாரணையாளர்கள் நம்புகின்றனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர், நியூமார்க்கெட் நகரைச் சேர்ந்தவர் என பொலிஸால் அடையாளம் காணப்பட்டார்.



காயமடைந்தவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

# கனடாவில் இளைஞர் கொலை;

# இந்திய வம்சாவளியினர் ஐந்து பேர் மீது குற்றச்சாட்டு




கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் 19 வயது இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட வழக்கில் இந்திய வம்சாவளியினர் ஐந்து பேர் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள யுடிடிழுவளகழசன இல் ஜனவரி மாதம் 19 வயதுடைய இளைஞர் ஒருவர் தாக்கப்பட்டார்.

அவரைக் கடத்திச் சென்ற சிலர் படுகாயமடைந்த நிலையில் அவரை சர்ரேயிலுள்ள கிரெசண்ட் கடற்கரையில் வீசிச் சென்றுள்ளனர்.

தகவலறிந்த பொலிஸார் அவரை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில், சிகிச்சை பலனின்று அவர் உயிரிழந்துவிட்டார்.

தற்போது, அந்த சம்பவம் தொடர்பில் ரவ்தீப் சிங் (வயது 21), ஹர்மன்தீப் கில் (வயது 26), ஜஸ்கரன் சிங் (வயது 20) மற்றும் பிபன்பிரீத் சிங் (வயது 22) ஆகியோர் மீது விருப்பத்துக்கு மாறாக கட்டாயப்படுத்தி அடைத்துவைத்தல் மற்றும் கொலைக் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், இந்தர்பிரீத் கோசா (வயது 19) என்னும் இளைஞர் மீது விருப்பத்துக்கு மாறாக கட்டாயப்படுத்தி அடைத்துவைத்தல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கனடாவில் நிலநடுக்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த 12,000 ஆண்டுகளாக இது எந்தவித அதிர்வுகளையும் ஏற்படுத்தவில்லை என்றாலும், தற்போது இதில் மிகுந்த அழுத்தம் சிக்கி இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

LiDAR மற்றும் செயற்கைக்கோள் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நடத்திய ஆய்வில், தற்போது 6 மீற்றர் அளவிலான அழுத்தம் குவிந்துள்ளதாகவும், இது 7.5 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தூண்டும் அளவுக்கு போதுமானது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

டின்டினா பிளவின் நீளம்சுமார் 1,000 கிலோ மீற்றர் ஆகும். இது பிரிட்டிஷ் கொலம்பியா வழியாக தெற்கு கனடா வரையிலும் தொடர்கிறது,

மேலும் ஒரு பெரிய பள்ளத்தாக்கை உருவாக்கும் மற்றொரு பிளவுடன் இணைகிறது.

இப்பகுதியில் கடந்த 26 லட்சம் ஆண்டுகளில் பிளவின் இருபுறமும் 1,000 மீற்றர் அளவுக்கு நகர்ந்துள்ளன.

குறிப்பாக 1.36 லட்சம் ஆண்டுகளில், 75 மீட்டர் அளவுக்கு நகர்வு ஏற்பட்டுள்ளது, இது ஆண்டுதோறும் படிப்படியாக நகர்வதை உணர்த்துகிறது.

விஞ்ஞானிகள் தெரிவிப்பதின்படி, இந்த நிலநடுக்கம் விரைவில் நடைபெறலாம், அல்லது இன்னும் பல ஆண்டுகளுக்குப் பிறகும் நிகழலாம். ஆனால் அதற்கான அழுத்தம் தற்போது போதுமான அளவில் இருக்கிறது என்பதுதான் கவலையின் மையமாக உள்ளது.

## கனடாவில் படகு விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏரிகளில் உள்ள பால்சம் ஏரியில் கடந்த செவ்வாய்க்கிழமை படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 75 வயது முதியவர் உயிரிழந்துள்ளார்.

பால்சம் ஏரிப் பகுதியிலிருந்து அவசர அழைப்பு வந்ததாக ஒன்ராறியோ மாகாண பொலிஸார் தெரிவித்தனர்.

படகில் சென்ற ஒருவர் நீரில் தவறி விழுந்து மீண்டும் மேலே வரவில்லை என்று அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

அந்த முதியவரைத் தேடும் பணி நடைபெற்றது, ஆனால் இரவு நேரம் வரை அவர் கண்டுபிடிக்கப்படவில்லை.

பொலிஸார் , நீருக்கடியில் தேடுதல் மற்றும் மீட்பு பிரிவு புதன்கிழமை அவரது உடலை கண்டுபிடித்ததாக தெரிவித்தனர்.

இந்த சம்பவம் குறித்த மேலதிக தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. சம்பவம் குறித்த விசாரணை தொடர்ந்து நடைபெறுவதாக பொலிஸ் தெரிவித்துள்ளது.